**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரமானது 2020 ஆம் ஆண்டுக்கான வலுவான AAA தரச்சான்று பெறும் தன்மையை பேணி வருகிறது

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 16, 2020) – நேற்றைய தினம் , S&P குளோபல் ரேட்டிங்ஸ் [Global Ratings (S&P)] என்னும் தரம் குறிக்கும் நிறுவனமானது, 2020 ஆம் ஆண்டிலும்கூட, ப்ராம்ப்ட்டன் நகருக்கான 'AAA' தரம் குறிப்பதை உறுதி செய்தது; இந்த தரம் குறிப்பதானது, நிலையானதொரு மேலோட்டப்பார்வை கொண்ட எந்த ஒரு நகராட்சியும் எளிதில் அடைந்துவிட முடியாத தரக் குறிப்பாகும். S&P யின் பார்வையில், இந்த தரம் குறித்தலானது நகரத்தின் ஆரோக்கியமானதும் பொருளாதாரம் மற்றும் நிதிரீதியானதுமான மேலாண்மையைக் கையாளும் நடைமுறைகளை எடுத்தியம்புவதுடன், கோவிட்-19 தொற்று பரவலின் தாக்கத்திலிருந்தும் மீட்சியடைவதில் துணை நிற்கும்.

**சிறப்பம்சங்கள்**

நகரத்தின் வலுவான தரச்சான்று குறிப்பதில் பங்களிக்கும் காரணிகள் என S&P குறிப்பிடுவதில் கீழ்க்கண்டவையும் அடங்கும் :

- வழக்கத்திற்கும் அதிகமான பணப்புழக்க நிலை, தன்னையொத்த நகராட்சிகளுடன் ஒப்பிடுகையில் கடனைத் திரும்பச்செலுத்துவதில் வலுவான நிலை.
- தேசிய சராசரி வயதைக் காட்டிலும் இளவயதினர் அதிகம் இருத்தல், ஆரோக்கியமான மக்கள்தொகை அதிகம் கொண்டிருத்தல் மற்றும் அவர்களின் வளர்ச்சி, முக்கிய சந்தைகளுக்கு அருகாமையில் இருத்தல் மற்றும் புதிய வணிகங்கள் மற்றும் வேலை வாய்ப்புக்களை இப்பகுதிக்கு ஈர்க்கும் வகையிலான சகாயமான வரி விதிக்கும் விகிதங்கள் ஆகியவற்றைக் கொண்டபடி நல்ல சமூக பொருளாதார மற்றும் மக்கள்தொகையியல் புள்ளிவிவர பண்புகள்.
- சம்பந்தப்பட்ட தொடர்புடைய தகவல்களை எளிதாக அணுகக்கூடிய வெளிப்படைத்தன்மை மற்றும் விரிவான இயக்க மற்றும் மூலதன வரவு செலவுத் திட்டங்கள்.

COVID-19 கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதால், அடுத்த இரண்டு ஆண்டுகளில் ப்ராம்ப்ட்டன் நகரின் பொருளாதாரம் மீண்டும் வேகத்தை கூட்டும் என்ற S & P இன் எதிர்பார்ப்பை, நிலையான மேலோட்டப்பார்வை பற்றிய தரம் குறித்தலானது பிரதிபலிக்கிறது, இது நகரத்தின் வலுவான பட்ஜெட் செயல்திறன் மற்றும் ஆரோக்கியமான பணப்புழக்க நிலைக்கு துணைபுரிகிறது.

**அறிஞர் கூற்றுக்கள்**

" கடந்த இரண்டு ஆண்டுகளில், நகரத்தின் சிறந்த நிதி மேலாண்மை நடைமுறைகளை நிலைநிறுத்த நமது நகர் மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஏறக்குறைய 20 ஆண்டுகளில் முதன்முதலாக, நாங்கள் வரிவிதிப்பு அதிகரிப்பதற்கான ஒரு முடக்கம் அளித்தோம், தொடர்ந்து அதை இரண்டு ஆண்டுகளாக பராமரிக்க முடிந்தது, அதே நேரத்தில் கையிருப்புக்களுக்குத் தேவையான பங்களிப்பு செய்ததிலும் சாதனை செய்தோம். பணத்திற்கான மதிப்பு பற்றிய தணிக்கையைச் செய்து $ 7.2 மில்லியன் டாலர் உட்பொதிந்துள்ள சேமிப்பு இருப்பதைக் கண்டறிந்தோம்; மேலும் பெருமூலதன திட்டப்பணிகளில் பரிசீலனை செய்ததில், திரும்பக் கிடைக்க வேண்டியதும் பதிய முனைப்புக்களில் முதலீடு செய்வதற்குமான நிதி $9.2 மில்லியன் எனவும், மேற்கொண்டு பரிசீலனை செய்யப்பட வேண்டிய நிதி $ 10.5 எனவும் கண்டறியப்பட்டிருக்கிறது. ப்ராம்ப்ட்டன் நகரம் நன்கு இயங்கும் நகரமாக ஆக்குவதை ஆதரிக்கும் முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம், மேலும் தொற்றுபரவலில் இருந்து மீட்சி பெறவும் உதவுவோம்

- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்

"தொற்றுநோய் ஏற்படுவதற்கு முன்னர் நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் நகரத்தின் கையிருப்பு சேமிப்பினை வலுப்படுத்தியதுடன், முன்னெப்போதும் இல்லாதவகையில் இன்று நாம் காணும் சவால்களை எதிர்கொள்வதில், எங்கள் நிதி நிலையை வலுப்படுத்த அது உதவியது. புதுமை படைக்கும் பகுதியில் அமைந்துள்ளபடி கனடா நாட்டில் விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாக, திறமை மற்றும் பன்முகத்தன்மையை வளர்க்கும் ஒரு முக்கிய வளர்ச்சி மையமாக ப்ராம்ப்ட்டன் நகரம் உள்ளது. "

- *ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வார்டுகள்* 9 & 10; *தலைமைப் பொறுப்பு, பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"எங்கள் செயல்பாடுகளை நவீனமயமாக்கும் போதே செலவுகளை கவனமாக சமநிலைப்படுத்துவதன் மூலம் நகரத்தை திறமையாக இயங்க வைக்க நாங்கள் பாடுபட்டோம். ப்ராம்ப்ட்டன் நகரை முன்னோக்கி தொடர்ந்து நகர்த்துவதற்கும் - குறிப்பாக COVID-19 இன் தாக்கங்களிலிருந்து நாங்கள் மீண்டு வருவதால் - எங்கள் குடியிருப்பாளர்கள், வணிகங்கள் மற்றும் முதலீட்டாளர்களை சிறப்பாக ஆதரிப்பதற்கும், சேவை மற்றும் நிதிவகையில் மிளிர்வதற்கும் முன்னுரிமை அளிப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். "

- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே

செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca *இல்* இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்

ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு

யுக்திரீதியான தகவல் தொடர்பு

ப்ராம்ப்ட்டன் நகரம்

905-874-3426 | Monika.Duggal@brampton.ca